


**02. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மாறிவரும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாணாக்கர் தங்களை தயார்படுத்திக்கொள்ள குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

2. தீவிரவாத்திற்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியாவிற்கு முழு உரிமை உள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்..

3. போதை பொருள் இணைப்பு சங்கிலியை முற்றிலுமாக ஒழிக்க மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. கோவை, தேனி, தென்காசி, மாவட்ட மலை பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களிலும் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் Vaidehi Chaudhari முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

************

### குடியரசு துணை தலைவர்

மாறிவரும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாணாக்கர் தங்களை தயார்படுத்திக்கொள்ள குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைகழகத்தின் 34 ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், அறிவார்ந்த புதிய தேடல்களை நோக்கி மாணாக்கர் தங்களை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற பிரதமரின் தொலைநோக்கு பார்வை, நிர்ணயித்த காலத்திற்கு முன்னதாகவே எட்டப்பட்டு விடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் 3 ஆவது பெரிய நாடாக நம் தேசம் விரைவில் முன்னேறும் என்று கூறினார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் கல்வி மற்றும் மருத்துவ துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்றார்.

குடியரசு துணை தலைவர் நாளை சென்னையில் சித்த மருத்துவ தின கொண்டாட்டங்களை தொடங்கிவைப்பதுடன்

இத்துறையில் சிறப்பாக சேவையாற்றிய 5 பேருக்கு விருதுகளை வழங்கி கவுரவிக்கிறார்.

************

ஜெய்சங்கர்

தீவிரவாத்திற்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியாவிற்கு முழு உரிமை உள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தின் தொழில்நுட்ப திருவிழா துவக்க நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், இந்தியாவின் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பிறருடைய உத்தரவு தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

எல்லை தாண்டிய தீவிரவாத நடவடிக்கைகள் நட்புறவையும், நீர் பகிர்தல் போன்றவைற்றை பாதிக்கும் என்று கூறிய அவர், நட்புறவும் தீவிரவாதமும் இணைந்து செயல்பட முடியாது என்று உறுதிபட தெரிவித்தார்.

இந்தியாவின் வெளிநாட்டு கொள்கைகள் உலகத்தை ஒரே குடும்பமாக கண்ணோக்குவதாகவும், குழப்பங்களுக்கு சுமூக தீர்வுகளுக்கு வழிகோலுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இந்திய நாட்டின் வளர்ச்சியால் தத்தம் நாடுகளும் வளர்ச்சி பெறுவதாக அண்டை நாடுகளும் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

அண்டை நாடுகள் நட்புடன் இருப்பதால் முதலீடுகள், உள்ளிட்ட பல்வேறு வகைகளில் இந்தியாவும் அவைகளுக்கு உதவிகரம் நீட்டுவதாக டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துரைத்தார்.

************

பிரதமர்

……… . MUSIC… …

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக 2025-ம் ஆண்டு மேம்பட்ட நிலையில், தொழில்நுட்ப வளர்ச்சி குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

……… . MUSIC… …

நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப பாதையில் 2025-ம் ஆண்டு தனி முத்திரைகளை பதித்து சாதனை படைத்துள்ளது.

இதுவரை பிறநாட்டு தொழில்நுட்பங்களை சார்ந்திருந்த நம் நாடு தொழில்நுட்பங்களை உருவாக்கி வெற்றிப்பாதையில் பீடு நடை போடுகிறது.

பெருமளவிலான முதலீடுகள் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் சீர்திருத்தங்களால் இது சாத்தியமானது.

10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மனித ஆற்றலை மையப்படுத்தி, செயற்கை நுண்ணறிவு முறைகளை மத்திய அரசு செயல்படுத்தி வருவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு பிரிவில் நம் நாடு இன்றியமையா தடத்தை பதித்துள்ளது.

ஸ்டான்ஃபோர்டு பல்கலைகழகத்தின் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தரவரிசை பட்டியலில் நம் நாடு அண்மையில் 3ஆவது இடத்திற்கு முன்னேறி அனைவரையும் வியப்பிற்குள் ஆழ்த்தியது மாபெரும் சாதனையாகும்.

செமி கண்டெக்டர் துறையிலும், மேம்பட்ட உற்பத்தி பிரிவிலும் நொய்டாவிலும், பெங்களுருவிலும், 3 நானோமீட்டர் தகடுகளை வடிவமைக்கும் செமி கண்டெக்டர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு உயர் தொழில்நுட்ப நுண் தகடுகள் சூழலிலும் நாம் முத்திரை பதித்து வருகிறோம்.

இதன்தொடர்ச்சியாக உள்நாட்டில் முதன்முதலாக வடிவமைக்கப்பட்ட விக்ரம் 32 Bit Chip பிரதமர் திரு.நரேந்திரமோடியிடம் செமிகான் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

புவி கண்காணிப்பு ரேடார் செய்கைகோளான நிஸாரின் வெற்றிகர விண்வெளி பயணம்,

ஹைதராபாத் sky root விண்வெளி வளாகத்திலிருந்து விக்ரம் 1 நாட்டின் முதலாவது சுற்றுபாதை ராக்கெட் தொடங்கப்பட்டது போன்றவை விண்வெளி துறையிலும் நம் தேசத்தின் அளப்பரிய சாதனைகளை முன்னெடுத்து செல்வதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

பிரதமர் வாய்ஸ்

நீடித்த நிலையான மேம்பட்ட அணுசக்தி மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதன் மூலம் தனியார் துறையினரும், முதல் முறையாக இத்துறையில் தடம்பதிக்க வழிகோலப்பட்டுள்ளது.

வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் நம் நாட்டின் மேம்பட்ட தொழில்நுட்ப திறன்களும் இணைந்து பயணிப்பதால் 2025ஆம் ஆண்டு தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆண்டாக சாதனை படைத்துள்ளது.

……..Music……..

************

முதலமைச்சர்

போதை பொருள் இணைப்பு சங்கிலியை முற்றிலுமாக ஒழிக்க மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் மதிமுகவின் இளைஞர்களின் நல்வழி சமத்துவ நடை பயணத்தை இன்று துவக்கிவைத்து பேசிய முதலமைச்சர், போதை பொருள் பயன்பாட்டை தமிழகத்திலிருந்து முற்றிலும் ஒழிக்க அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

போதை பழக்கத்திற்கு அடிமையாக உள்ள இளைஞர்களை மீட்க முயற்சிகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளிலிருந்து போதை பொருள் கடத்திவரப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

************

காந்தி

தமிழகத்தில் மக்களுக்கான நல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் புதிய மின்னணு குடும்ப அட்டைகளை இன்று பயனாளிகளுக்கு வழங்கி பேசிய அவர், மக்களை தேடி சென்று திட்டங்களை பொதுமக்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

************

பேச்சுவார்த்தை

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் மாநில அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் சென்னை தலைமை செயலகத்தில் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

பழைய ஓய்வூதிய திட்டம், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 6ஆம் தேதிமுதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை இந்த சங்கங்கள் அறிவித்த நிலையில் இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகிறது.

************

இருவரி

மன்னார்குடி ஹரித்ரா நதி தெப்பகுளத்தில் நான்கு கரைகளிலும் நந்தவனம் அமைக்கும் பணிகளை மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா இன்று தொடங்கிவைத்தார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறுகிறது.

கேரள மாநிலத்தில் பறவை காய்ச்சல் எதிரொலியாக அங்கிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு கொண்டுவரப்படும் கோழிகள் மற்றும் அது சார்ந்த பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் தச்சன்குறிச்சியில் இந்தாண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி நாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் கன மழை காரணமாக மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் மேட்டுப்பாளையும் – உதகை மலை ரயில் இன்று ஒருநாள் ரத்து செய்யப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில் திருச்சி மத்திய மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகள் நாளை தொடங்குகிறது.

இதில் பெரம்பலூர் அரியலூர் திருச்சி தஞ்சாவூர் புதுக்கோட்டை கரூர் திருவாரூர் மாவட்டங்களை சேர்ந்த

தீயணைப்புத்துறை வீரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு போட்டிகள் நடைபெற உள்ளன.

************

தண்ணீர் திறப்பு

கோவை ஆழியாறு அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

135 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் பொள்ளாச்சி ஆணைமலை வட்டங்களில் உள்ள 22 ஆயிரத்து 332 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

************

கன்னியாகுமரி - கோவில்

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்தரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோவிலின் மார்கழி திருத்தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு.மனோ தங்கராஜ் உள்ளிட்டோர் வடம்பிடித்து தேரோட்டத்தை தொடங்கிவைத்தனர்.

ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

உத்திரகோசமங்கை

ராமநாதபுரம் அருள்மிகு உத்தரகோச மங்கை திருக்கோவிலில் ஆருத்ரா விழாவின் முக்கிய நிகழ்வாக நடராஜர் பச்சை மரகத மேனியாய் பக்தர்களுக்கு இன்று அருள்பாலித்தார்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இதனை தரிசித்தனர்.

இந்நிகழ்வை ஒட்டி ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

இன்று இரவு மகா அபிஷேகம் நடைபெறுவதுடன், நாளை அதிகாலை நடராஜரின் திருமேனியில் சந்தனம் மீண்டும் பூசப்பட்டு ஆருத்ரா தீபாராதனைகள் நடைபெற உள்ளன.

************

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, தேனி, தென்காசி, மாவட்ட மலை பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களிலும் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு , தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அடுத்த நான்கு நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை தமிழகத்தில் படிப்படியாக குறையக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

************

டென்னிஸ்

அஹமதாபாத்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் Vaidehi Chaudhari முன்னேறியுள்ளார்.

காலிறுதியில் அவர் ஜப்பானின் Honoka Kobayashi-ஐ 6-3 6-4 என்ற நேர் செட்களில் வென்றார்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது